International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 03 July to August 2020 www.irjtsjournal.org

# பா.முருகேசுவரியின் மாறிப்போன பல்லவிகளில் பெண்களுக்கான சிக்கல்கள்

திருமதி பெ.சிவசக்தி,

*உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை,*

*ஸ்ரீ காளிஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.*

**முன்னுரை**

'எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கும் பெண் இளைப்பில்லை' என்று பாரதி கூறியதற்கு ஏற்ப பெண்கள் இன்று அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். என்னதான் சரிநிகர் சமானம் என்று பேசினாலும் கூட குடும்பநிலையில் பெண்களுக்கென சிக்கல் எழவே செய்கின்றன. பா.முருகேசுவரி அவர்கள் எழுதிய மாறிப்போன பல்லவிகள் என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறும் பல்வேறுபட்ட பெண்களும் பல்வேறு சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். சில கதைகளில் துணிந்து சிறகுகள் வீசிப் பறந்திட முடிவெடுக்கவும் செய்கின்றனர். அந்த வகையில் மாறிப்போன பல்லவிகள் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெறும் பெண்கள் சந்திக்கும் பிரச்சனைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண்ணிற்கான வரையறை**

பெண் என்றால் மென்மைத் தன்மை வாய்ந்தவள். பெண் என்றும் தனித்து செயல்பட முடியாதவள். ஆணுக்கு அடங்கியே வாழ வேண்டியவள் என்ற கருத்து வளர்ந்து வந்த இந்த காலகட்டத்திலும் ஆங்காங்கே பரவிக் காணப்படுகிறது. தொல்காப்பியர் கூட

"பெருமை உரனும் ஆடூஉ மேன"[1] (தொ.பொ.கள.7)

எனக் கூறியிருக்கிறார். இதன்படி வலிமையான உடற்கட்டுடைய வீரதீரச் செயல் செய்யக் கூடியவனே ஆண்மகன் என்று இலக்கணம் கூறியுள்ளார்.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்குஉரிய என்ப"[2] (தொ.பொ.கள.8)

என்று பெண்ணிற்கு இலக்கணம் வரையறுக்கிறார். பெண்கள் அச்சம், நாணம், மடம் போன்றவற்றை உடையவர்களாக இருத்தல் வேண்டும். மேலும் பொருள் தேடவொ, கல்விக்காகவோ கடல் தாண்டிப் பயணம் செய்தல் கூடாது என்கிறார். ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் அமைப்பே குடும்பம் ஆகும். குடும்ப வாழ்க்கை என்பது ஒரு அறம் என்று போற்றுகிறது இந்து தர்மம். அதனால்தான் தமிழ் மொழியில் அதனை இல்லறம் என்கிறது. இல்லறம் என்னும் நல்லறத்தின் நுழைவுவாயில் திருமணம் ஆகும். அந்தத் திருமண பந்தத்தின் காரணமாக குடும்பங்களில் பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. பா.முருகேசுவரியின் மாறிப்போன பல்லவிகள் கதைகளில் காணப்படும் பெண்களை,

- பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளும் பெண்கள்
- சுயதொழில் செய்யும் பெண்கள்
- அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் பெண்கள்
- துணிச்சலாக முடிவு எடுக்கும் பெண்கள்
- பாரதி கண்ட புதுமைப் பெண்கள்

- கணவனை இழந்த பெண்கள்

எனப் பாகுபடுத்தலாம்.

**பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளும் பெண்கள்**

திருமணம் ஆன பெண்ணிற்குத் தனிப்பட்ட விருப்போ வெறுப்போ இருத்தல் கூடாது. ஒரு மனைவிக்கென விதிக்கப்பட்ட மரபுகளையே இன்னும் பின்பற்றிக் கொண்டுதான் இருக்கிறோம்.

“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையின் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்”[3] (தொ.பொ.கள.152)

என்று தொல்காப்பியர் ஒரு திருமணமான பெண்ணின் இல்லறக் கடமைகளை வலியுறுத்தியுள்ளார்.

இன்று சம்பாதிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக பல ஆண்கள் குடும்பத்தை விட்டு வெளிநாட்டிற்குச் செல்கின்றனர். பெண்கள் குடும்பத்தை, குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளட்டும் என்றும் கருதுகின்றனர். இந்நிலையில் பல நேரங்களில் கணவன் உடன் இல்லாத காரணத்தால் சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது. குறைந்தபட்சம் அவளின் மனஉணர்வுகளைப் புரிந்துகொள்ளக் கூடாத மனமில்லாதவர்களாக ஆண்கள் இருக்கின்றனர். மனைவியும் வறட்சியாகும் வாழ்வைக் கூட வளமாக்கிக் கொள்ளத் தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்கிறாள் என்பதை மண்ணின் பிணைப்பும் இணைப்பும் என்ற கதையின் மூலம் ஆசிரியர் விளக்கியுள்ளார். தேவி தன் கணவனிடம்,

“உங்க அறிவுத்தாகத்திற்கு ஈடாயிருக்க முடியாதுனு தெரிஞ்சு, வீணா உங்களோட மோதி துயரப்படுத்த விரும்பல. காலக் கறையான் என் வாழ்வை அரிக்கவிடாம, வாழ்வே வரப்பிரசாதம். அத வறட்சியாக்க, சுமையாக்க விரும்பல. இசையைக் கத்துக்கிட்டேன். நானும் சிரிச்சேன். மத்தவங்களையும் சிரிக்க வைச்சேன். காலம் கண்முன் புன்னகைத்தது….” (மா.பே.ப.ப.25)

என்று கூறுவதன் மூலம் பெண் என்னதான் சிரமப்பட்டாலும் வாழ்க்கை ஓட்டத்திற்காக அனைத்தையும் புன்னகையோடு ஏற்றுக் கொண்டு வாழ வேண்டிய நிர்பந்தத்தில் இருப்பதை அறிய முடிகிறது.

**சுயதொழில் செய்யும் பெண்கள்**

செய்யும் தொழிலே தெய்வம். இன்று பெண்கள் அனைத்துத் தளங்களில் கால் ஊன்றத் தொடங்கிவிட்டனர். பிறரிடம் வேலை செய்து கூலி பெறுவதைக் காட்டிலும் சுயதொழில் செய்து பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவிற்கு உயபந்துவிட்டனர் என்பதை ஊனமாகா உண்மைகள் கதையில் குறிப்பட்டுள்ளார். இந்தக் கதையில் வரும் அகல்யா,

“அப்பா விருப்பப்படி யாரிடமும் வேலை பார்க்காம சுயமா கோழிப்பண்ணை வச்சிருக்கேன். எங்க தோப்பில் வர்ற காய்கறிகளை வீணாக்காம, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்படி ஊறுகாய், வடகம், அப்பளம் போடறோம். மொத்தத்தில் வேலை தேடி அலையல; பத்து பேருக்கு வேலையும் கொடுத்துக்கிட்டு இருக்கிறதுல நிம்மதியா இருக்கேன்” (மா.பே.ப.ப.92)

என்கிறாள். பெண்கள் படித்தாலும் படிக்காவிட்டாலும் திறமை இருந்தால் போதும். உழைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் போதும். சுயதொழில் செய்து முன்னேறலாம் என்பதையே மேற்காணும் வரிகள் சுட்டுகின்றன.

**அநியாயத்தைத் தட்டிக் கேட்கும் பெண்கள்**

ஒரு பெண் காதலித்தவனையே கைபிடிப்பது என்பது இன்றைய சமூகத்தில் எளிதல்ல. இருப்பினும் கைகட்டும் வேலையிலும் பல பிரச்சனைகள் எழுகின்றன. அந்த நிலையில் திருமணத்திற்குத் தயாராக இருக்கும் பெண் துணிச்சலாக முடிவெடுக்க வேண்டிய நிலை உள்ளது. மா.போ.ப கதையில் வரும் சௌம்யாவின் அப்பா 2 வது திருமணம் செய்து கொள்கிறார். சௌம்யாவிற்குத் திருமணம் நடக்கின்ற சமயத்தில் மாப்பிள்ளை வீட்டாருடன் சேர்ந்து மகளையேத் தத்தெடுக்கத் திட்டம் தீட்டுகிறார். இதை அறிந்த செம்யா தன்னுடைய தாய்பட்ட கஷ்டங்கள், அவமானங்கள் அனைத்தையும் சிந்தித்துத் திருமணம் செய்து கொள்ளமறுப்புத் தெரிவிக்கிறாள். இது அங்குள்ள அனைவரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

“ அய்யா பொண்ணுக்கு, காலமெல்லாம் புரிஞ்ச ஒத்துப் போற வழித்துணை அமைஞ்சா வாழ்வு சொர்க்கந்தான் இவ்லேங்க; ஆனா பெண்ணுக்கு ஆடவன்தான் வழித்துணையாய் இருக்கணும்ங்கிற காலம் மாறிப்போச்சுங்க. இந்தப்போலிகளை, பச்சோந்திகளை, புல்லுருவிகளை நம்பி வாழ்றதை விட, படிப்பையும் அநாதைகளுக்கு சேவை செய்யும் பணயையும் வழித்துணையாகக் கொண்டு வாழ்றதும் புனிதம்தாங்க. நான் கட்டினவன் காலைப் பிடிச்சு நிக்க நளாயினி இல்ல……. பாரதி காட்டிய புதுமைப் பெண்ணுங்க. அநியாயத்தைச் சௌம்யா அசுரவதம் செய்து ஆசாரக் கோடுகளை அழித்து, நிர்பந்த ஒப்பனையைக் கலைத்துவிட்டு ஒரு புதிய கங்கையெனப் புயல் போல் புறப்பட்டாள்” (மா.பே.ப.ப.45)

என்ற வரிகள் ஒரு பெண் எப்பொழுதும் அடங்கியே நிற்கமாட்டாள். அநியாயம் இழைக்கப்படுகிறபோது அவற்றைத் தட்டிக் கேட்கத் தயங்கமாட்டாள் என்பதையேக் காட்டு நிற்கிறது.

**துணிச்சலாக முடிவெடுக்கும் பெண்கள்**

இந்த சமூகத்தில் ஒரு பெண்ணிற்கு முழு அந்தஸ்தை வழங்குவது பிள்ளைப்பேறு. துரதிஷ்டவசமாக சில பெண்களுக்கு திருமணமாகிப் பல வருடங்கள் கழிந்த பிறகும் கழிந்த பிறகும் குழந்தை பிறப்பதில்லை. உடல். மனம், சூழல் இவைகள் காரணமாக குழந்தைப்பேறு தள்ளிப் போக வாய்ப்புள்ளது. பனைநிழல் என்ற கதையில் மனைவி குழந்தை பெற்றுத் தரவில்லை என்பதைக் காரணம் காட்டி இரண்டாவதாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். குழந்தை பிறந்து பெரியவனாகிய பின்பு மாமியார் மருமகளுக்கிடையே சண்டை நடக்கிறது. இதில் 2 வது மனைவி கணவனைப் பிரிந்து செல்கிறாள். கணவனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போக 2 வது மனைவிக்குத் தெரியப்படுத்துகின்றான். ஆனால் அவளோ அதைப் பெரிதுபடுத்தவில்லை. விதியின் சேர்க்கை முதல் மனைவியிடமே அவனை ஒப்படைக்கிறது. முதல் மனைவி வாழ்க்கையில் போராட்டங்களைத் தாண்டித் தற்போது ஒரு அநாதைக் காப்பகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள். அவளைக் கண்டதும் மீண்டும் தன்னுடன் சேர்ந்து இருக்க வருமாறு கூப்பிடுகிறான். அவளோ,

“என்ன சார் இப்படி சொல்றீங்க எல்லோரும் ஒதுங்க நிழல் தரும் ஆலமர நிழல் நான் இல்லீங்க. ஆனா நான் இங்க இருக்கிற சிலர் ஒதுங்க நிழல் தரும் பனைமர நிழல்”

(மா.பே.ப.ப.116)

என்று கூறுகிறாள். இவ்வாறாக குழந்தையில்லை என்பதற்காக வஞ்சிக்கப்படும் பெண்கள் இருக்கவே செய்கிறார்கள். அவர்கள் துணிச்சலாக வாழ்வின் அடுத்தகட்ட நிலைக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ளத் தயாராகவும் இருக்கிறார்கள் என்பதையே இந்தக் கதை விளக்குகிறது.

**கணவனை இழந்த பெண்கள்**

பெண் சார்புள்ள வாழ்க்கையையே வாழ வேண்டிய சூழல் உள்ளது. அதிலும் குறிப்பாக கணவனை இழந்தபின் பெண் சந்திக்கும் பிரச்சனைகள் ஏராளம். சமூகத்தின் புறத்தாக்குதல் மட்டுமின்றி குடும்பத்திற்குள்ளும் பெற்ற பிள்ளைகளாலேயே பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. 'எங்கே போகிறோம்' என்ற கதையில் கணவன் ஆசை ஆசையாகப் பார்த்து வாங்கியப் பொருட்கள் எல்லாம் அவர் இறந்தபிறகு பங்கு போடப்படுகிறது. மகன்களும் மகளும் தன்னிடம் எதுவும் கூறாமல் வீட்டை விற்பதற்கு ஏற்பாடு செய்வதை அறிந்து குமுறுகிறாள். இதனை,

"ஒவ்வொன்னாகேட்டு கேட்டு கஷ்டப்பட்டு கட்டின வீட்டை ஒரு வார்த்தை கேட்காம வித்திட்டீங்களே, பாவி! பெத்தவங்களுக்கு என்ன மதிப்பு மரியாதை இந்த ஜெனரேசன் தருது"

என்று அவ்வீட்டில் உள்ள ஊஞ்சலும், டிரெஸ்ஸிங் டேபிளும் பேசுவது போல காட்டியுள்ளார். இந்தக் கதையில் வரும் தாய் ஆனந்தி கடைசியாக மூன்று பிள்ளைகளையும் விட்டு அநாதை விடுதியில் பணிபுரியச் செல்கிறாள். கணவன் இல்லை என்றால் பெண்ணின் நிலை என்ன என்பதையே இக்கதை சுட்டுகிறது.

மற்றொரு கதையில் கலப்புத் திருமணம் செய்து கொண்ட பின் கணவனை இழந்த சூழலில் ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளைக் காட்டியுள்ளார்.

"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி" (பாரதியார், பெண்விடுதலைக்கும்மி பா.எண். 23)

என்று பாரதியார் புதுமைப்பெண்ணின் காதலுக்கு விளக்கம் தந்துள்ளார். ஆனால் சமுதாயத்தில் நிலவும் சாதி, மத, இன வேறுபாடு காரணமாக பெண்கள் பல சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது. சிலுவைகளைச் சிறகுகளாக்கி கதையில் வரும் ராணி கலப்புத் திருமணம் செய்து கொள்கிறாள். சாதியைக் காரணம் காட்டி இருவீட்டாரும் ஏற்க மறுக்கின்றனர். இச்சூழலில் சாதி வன்முறையில் கணவனை இழந்துவிடுகிறாள். சாதிக்கலவரத்தில் உயிரிழந்தவர்களுக்கு அரசாங்கம் ரூ50000 உதவித்தொகை வழங்கவிருப்பதாகத் தகவல் வெளியானதும் இரு வீட்டாரும் பணத்திற்காக இராணியைத் தேடி வருகின்றனர். பணத்தேவையைப் பூர்த்தி செய்து கொடுத்தபின் அவளை அவள் இஷ்டப்படி வாழ்ந்து கொள் என்கிறார்கள். பணத்திற்காக உறவுகள் போட்டி போட்டு இராணியைத் தேடி வருகிறது. ஆனால் கணவன் இல்லாமல் அவள் எவ்வளவு மனஉளைச்சலுக்கு ஆளாகியிருப்பாள் என்பதைக் கூட நினைத்துப் பார்க்கவில்லை.

"உன் ராசிதான் பாவிமகனைப் பறிச்சிடுச்சு. என் புள்ள மட்டும் இருந்தா இப்படிக் காத்துக் கிடந்து உன் காலைப் பிடிச்சிருக்க மாட்டோம். எங்க போதாத னேரம் தாயி, உன்ன கூப்பிட வாரோம். எங்கையும் ஓடிப் பொயி தேட வச்சிடாத தாயி" என மாமியாரும், மாமனாரும் ஈட்டியாகக் குத்தினர். உறவுகள் பணம் கொத்திப் பறவைகளாக இருக்கின்றதையே ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தொகுப்புரை**

- பெண்ணிற்கு தனக்கென விருப்போ, வெறுப்போ இருக்கக் கூடாது. எந்த நிலையிலும் தன்னைத் தியாகம் செய்து கொள்ளும் மெழுகுவர்த்தியாகவே வாழ வேண்டும் என்ற சமூகத்தின் எதிர்பார்ப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

- பெண்கள் பொருளாதார நிலையில் தங்களை உயர்த்திக் கொள்ள சுயதொழில் புரிவதற்குமுன் வந்திருப்பதையும் அறிந்து கொள்ளலாம்.
- சிறியநூற்கண்டு தன்னை சிறைக்குள் செலுத்த முற்படுவதற்கு முன் அறுத்தெறியத் துணிந்து நிற்கும் பெண்களை இனங்காண முடிகிறது.
- கணவனை இழந்த பெண்ணிற்கு பிள்ளைகளும் உறவுகளும் ஆதரவு தராமல் சுயநலமாக செயல்படுவதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1] தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல் நூற்.7

[2] மேலது நூற்.8

[3] மேலது நூற்.152

[4] பாரதியார், பெண் விடுதலைக் கும்மி, பா.எண்.23